

# “ஏசுவையே துதி செய்”

இசை, மனித வர்க்கத்திற்கு தேவன் அளித்த இணையில்லா பரிசாகும். வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் மனிதன் இசையுடன் இணைந்து வாழ்கிறான். இசை, குறிப்பாக கர்த்தரைத் தொழுது கொள்ளும் பொழுது ஆவியோடும், கருத்தோடும் பாடி மகிழ்வது, மனிதனது உடலோடும், உள்ளத்தோடும் ஒன்றிவிட்ட ஒன்றாகும். கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக முக்கிய அம்சம் கர்த்தரைத் துதிப்பதாகும். தேவாதி தேவனும் நாம் அவரைத் துதிக்க ஆரம்பிக்கும் போதே நம்மத்தியில் இறங்கி வருகிறார் சங்.22 : 3ல் ‘‘துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீர்’’ என்று வாசிக்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் பாடப்படும் பாடல்களில் ஒன்று ‘‘ஏசுவையே துதிசெய்’’ என்னும் கீர்த்தனையாகும். இப்பாடல் தஞ்சை தே.வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களால் எழுதப்பட்டு, இசை அமைக்கப்பட்ட ஒரு கீர்த்தனையாகும்.

தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் 1774ம் ஆண்டு செப்டம்பர் 7ம் தேதி பிறந்தார். தனது 12-வது வயதில் சுவார்ட்ஸ் ஐயரின் வழிநடத்துதலால் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அது முதல் அவர் தனது 90வது வயதில் மரிக்கும் வரை, ஆண்டவர் தனக்குத் தந்த தமிழ்ப் புலமையைக் கொண்டு, அவரைத் துதித்து, பல பாடல்களையும், நூல்களையும், பண்ணெடுத்துப் பாடினார். தஞ்சையை அந்நாட்களில் ஆண்டு வந்த சரபோஜி மன்னன், அவரது சிறுவயது நண்பராவார். அவர் சாஸ்திரியாரின் புலமையைப் பாராட்டித் தன் அரசவைக் கவிஞராக வைத்துக் கொண்டார். அவருக்கு மானியமும் வழங்கினார்.

‘‘குற்றாலக் குறவஞ்சி’’ என்ற நாடகத்தின் அடிப்படையில் வேதநாயக சாஸ்திரியார், ‘‘பெத்லகேம் குறவஞ்சி’’ என்ற பாடல் நூலைத் தனது 25-வது வயதிலேயே எழுதி, இயேசு தெய்வத்திற்குப் புகழ்மாலை சூட்டினார். இப்பாடல்

நூலைத் தன் நண்பன் சரபோஜி மன்னரிடம் பாடிக்காட்டினார். மன்னனும் கேட்டு மகிழ்ந்தார்.

பின்னர் 1820ம் ஆண்டு சரபோஜி மன்னனாக முடி சூடப்பட்டபோது, சாஸ்திரியார் அவருக்கு வாழ்த்துப் பாட்டு ஒன்றைப் பாடினார். மகிழ்ந்த மன்னன், தான் வணங்கும் தஞ்சைப் பிரகதீஸ்வரர் மீது ஒரு குறவஞ்சி படைக்க, சாஸ்திரியாரை வேண்டினான். இதை எதிர்பாராத சாஸ்திரியார் திடுக்கிட்டார். ஏனெனில் அவர் இயேசு ஒருவரையன்றி வேறொருவரையும் துதித்து ஆராதிப்பதில்லை. பக்தி வைராக்கியத்தின்படி அரசரிடம் அமைதியாக தன் நிலையை எடுத்துக் கூறினார். ஆனால் சரபோஜியோ விடுவதாக இல்லை. பாடல்கள் நிறைந்த முழுநூலைப் பாடாவிட்டாலும், ஒரு பல்லவி போன்ற, காப்புச் செய்யுளையாவது, வினாயகர் மீது பாடிக்கொடுக்க வற்புறுத்தினான்.

வேதநாயக சாஸ்திரியாருக்கு மிகவும் இக்கட்டான நிலை, தன்னை மிகவும் மதித்து, ஆதரவளித்து வரும் அரசனின் வேண்டுகோள் ஒருபுறம். ஆனால் மற்றொரு புறம், தன்னையே, தியாகம் செய்து, அவரைப் பாவத்திலிருந்து மீட்டெடுத்த அன்பர் இயேசு ஒருவருக்கே செலுத்த வேண்டிய புகழ் ஆராதனை.

மிகுந்த மனப் போராட்டத்துடன், சாஸ்திரியார் தன் வீடு திரும்பினார். வேதனையோடு தனது தர்ம சங்கடமான நிலையை மனைவியிடம் மெதுவாக எடுத்துச் சொன்னார்.

‘‘ஆண்டவரைப் பாடும் வாயால், இப்படியும் ஒன்றைப் பாடப் போகிறீர்களா?’’ என்று கவலையுடன் அவர் மனைவி வினவினார். ஆனால் சாஸ்திரியாரின் உள்ளமோ, ஒரே தெய்வமாகிய நிகரற்ற இறைவன் இயேசுவின் மீதுள்ள பக்தி வைராக்கியத்தால் பொங்கிப் பாடலாக வழிந்தது. அதுவே இப்பாடலாகும்.

‘‘பல்லவி’’

ஏசுவையே துதிசெய் நீ, மனமே
ஏசுவையே துதிசெய், - கிறிஸ் தேசுவையே.

சரணங்கள்

1. மாசணுகாத பராபர வஸ்து
நேச குமாரன் மெய்யான கிறிஸ்து - ஏசுவையே

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்

சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன் - ஏசுவையே

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க - ஏசுவையே

பின்னர் சரபோஜி மன்னரிடம் சென்று, இப்பாடலைப் பாடினார். இறைப்பணியைக் கட்டுப்படுத்தும் பரிசில்களில் தனக்கு நாட்டமில்லை என்பதையும், ஆணித்தரமாகக் கூறினார். இப்பாடலையும் கேட்டு மகிழ்ந்த அரசன், இறைவன் இயேசுவின் மீது வேதநாயகம் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசப் பற்றைப் பெரிதும் பாராட்டினான். ''உம் தெய்வத்தைப் பற்றி நீர் எங்கும் தடையின்றி எடுத்துக்கூற, என் அனுமதி உமக்குண்டு'' என்று கூறினான். வேதநாயக சாஸ்திரியார் படைத்த

''மனுஷருவானவனைத் தோத்தரிக்கிறேன் - மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்தரிக்கிறேன் ;
கனிவினத் தீர்த்தவனைத் தோத்தரிக்கிறேன்
யூதக் காவலனை ஆவலுடன் தோத்தரிக்கிறேன்
வேறு எவரையும் தோத்தரியேன்''

என்ற மற்றொரு கவியிலும், அவரது சிறந்த பக்தி வைராக்கியம் தெளிவாக விளங்குகின்றதல்லவா! தென்னிந்தியத் திருச்சபைகளில் பொதுவாக உபயோகிக்கப்படும் தமிழ்க் கீர்த்தனைப் பாடல் புத்தகத்தில் அதிகமான பாடல்கள், வேதநாயக சாஸ்திரியாரால் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரியாரைப் போல நாமும் உலகத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுக்காக வைராக்கியமாக இருந்து தேவன் ஒருவருக்கே ஆராதனை செய்வோமாக.

சாஸ்திரியார் எழுதிய இப்பாடலை மறவாது இறைவனைப் பாடித்துதிக்க நாமும் பயன்படுத்துவோமாக.

**G.முத்து செல்வன் ஆரோன்**

கோயம்புத்தூர்.